

நுணாவில் கிழக்கு, கல்வயல் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த

# அமரர் குமாரசாமி சிவகோசரி (சிவா)

அவர்களின் சிவப்பேறு குறித்த

# சிவகடாட்சம்


28-03-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணமயம்



நுணாவில் கிழக்கு, கல்வயல் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த

அமரர்

# குமாரசாமி சிவகோசரி (சிவா)

(ஜோதி புடவை நிலையம்)

அவர்களின் சிவப்பேறு குறித்த

# சிவகடாட்சம்

**28-03-2011**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குடும்பத் தலைவரின் பாதக்கமலங்களுக்கு

இந்நூல்

# சமர்ப்பணம்

பெற்றோர்க்கு நன்மகனாய் பெருமை சேர்த்து
கற்றோரைக் காமுற்று காசினியோர் போற்ற
வற்றாத ஊற்றாக வளம் கொழித்து எந்நாளும்
பற்றற்று வாழ்ந்த உத்தமரே எம் தெய்வம்

கைப்பிடித்த நாள்முதல் மெழுகெனவே உருகி நின்றீர்
என்றும் எம் உள்ளத்தில் கோயில்கொண்ட
அன்புத் தெய்வமே

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நிறைமொழியை
நிலைநிறுத்தி தந்தைக்குரிய கடமைகள்
சிறிதும் தவறாமல் எமக்கெல்லாம் இறைநாமம் சூட்டி
குருபக்தி, இறைஅன்பு என்பவற்றை எமக்கு ஊட்டி

தரணியில் தலைநிமிர்ந்து வாழ வைத்து
பெருங்குளம் பிள்ளையாரில் பேரன்பு பூண்டு
கற்குளி கந்தன் பதியில் மணம்புரிந்து
தாளையம்பதி துர்க்கையம்மன் துதிபாடி
மருதடி விநாயகரை நாளும் நினைந்து
ஐயப்பன் ஆலயத்தில் விழாக் கண்டு
அனைவரையும் அன்பு காட்டி அரவணைத்த
எம் அன்புத் தெய்வத்தின்
பாத கமலங்களுக்கு இம்மலரைக்
காணிக்கையாக்குகின்றோம்.

மனைவி, மக்கள், சகோதரர்,
மைத்துனர், மருமக்கள்,
உறவினர்கள், நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு
03-09-1950

உதிர்வு
26-02-2011

அமரர்

# குமாரசாமி சிவகோசரி (சிவா)

(ஜோதி புடைவை அகம்)

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டது விகிர்தி மாசிமதி பதின்னான்கில்
பூண்டதிதி அபரபக்க நவமிதனில் - மாண்புடைய
சிவகோசரி நாமமுடையோன் சிவனடியே சரணென்று
சிவலோகம் சென்றடைந்தான் சிறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# பஞ்ச புராணங்கள்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டாக் கழுமலம்
பல்லூர் பெருமணம் பாட்டுமெய்யாய்தில
சொல்லூர் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் ஏய நம்மானே

## திருவாசகம்

பால்நினைந்தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
யாரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊளகு முலகுங் களற வுழறி
யுமை மணவாளனுக்காட்
பாரும் விசும்புமறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

நன்மை பெருக அருளறியேன் வந்தணைந்த நல்லூரின்
மன்னு திருத்தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசை பாதமலர் சூட்டினார் சிவபெருமான்

## திருப்புகழ்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானே முகப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் குமாரசாமி சிவகோசரி (சிவா) அவர்களின் வாழ்க்கை வரலாறு...

உலகம் உவப்ப உயிராய் நிலைபெறு பலவளம் மிகமலி தென்மராட்சியில் தென்னையும், பனையும், பலாவும், மாவும் மன்னிய நெல்வயல் சூழ் கல்வயலில் அம்பலவாணர் வீரகத்திப் பெருங்குள விநாயகர் சேருங் கருணைக் கருகதை உடையோர் பண்புக்கணிகலன் ஆகிய தம்பதி குமாரசுவாமியும் நங்கை நாகரத்தினமும் நல்லியற் செல்வம் மல்கிய இல்லறப் பேறாய்ப் பெற்ற பெருந்தகையான் சிவகோசரி.

நீறணி சைவம் நித்தியம் போற்றிய சிவா எனும் தகைசால்புடையார் நற்குணநலன்கள் வாய்க்கப் பெற்ற சீருடையனாய் தாய் தந்தையரும் தமரும் புகழ ஆசைக்கொரு அக்காவாம் ஈஸ்வரியுடன் உடன் பிறந்த பெரியண்ணன் பிறைசூடியும், குமரகுருவும் கடைசியில் நந்தகுமாரனை அன்புத் தம்பியாகவும் பெற்றார்.

வல்லிபுரம் - கண்ணகப் பிள்ளையின் அருந்தவப் புதல்வியாம் இந்திரஜோதியை 1982ம் ஆண்டதனில் பெருங்குளப் பிள்ளை யாரின் முடிவுடன் மனதார மணம் முடித்து இல்லற நல்வாழ்வில் இணைந்தார். பண்பிற்கும், பாசத்திற்கும் உறைவிடமாம் இல்வாழ்விலே மிகுந்த அன்பான வாழ்க்கையின் பேறாக க[illegible]யல், தாளையடி துர்க்காதேவியிலும் வைத்திருந்த [illegible]றின் பேறாகவே "ஜோதி" என்ற பெயருடன் தனக்கு மனைவி அமைந்த தாக எப்போதும் கூறுவார். பிரிவு என்பதையே அறியாத இவர்களின் மணவாழ்க்கையான [illegible]வித குறைகளுமின்றி நிறை செல்வங்களாக மூத்த புதல்வியாக சோபனாவையும், இரண்டாவதாக அனுஷாவையும், ஆசைக்கொரு அருந்தவப் புதல்வன் ஜனகனும், கடைக்குட்டியாக தேவகியையும் பெற்றெடுத்து நல்வாழ்வு வாழ்ந்தார். சோபனாவிற்கு தனது உறவுகளின் வழியிலே சங்கர் எனும் செல்வப் புதல்வனைத் தனது மருமகனாக்கிக் கொண்டார்.

தனக்கேயுரிய தனித்துவமான பாசமிகு மச்சான்மார்களான ஸ்ரீஸ்கந்தராஜா (ஸ்ரீ), நித்தியானந்தம் (ஆனந்தி), ராஜ்வேல் (ராஜி) அவர்களுடன் அளவுகடந்த அன்பாக இருந்தவர். மோகனாம்பிகை, ஞானாம்பிகை மச்சாள்மார்களாகவும், முருகதாஸை அன்பு மச்சானாகவும் கொண்டு தனது உடன்பிறப்புகள் போல இவர்கள் யாவரும் இவரில் அளவுமிகு பாசத்துடன் நடந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அன்பு மைத்துனரான கைலேஸ்வரனின் அருகிலேயே அன்றுமுதல் வாழ்ந்து வந்தார். அன்பு மைத்துனர் களாக கருணாகரன், மகேந்திரன், சந்திரஜோதி, மங்களஜோதி, குமரேந்திரன் ஆகியோருடனும் அன்பாக வாழ்ந்து வந்தார்.

திருக்கைலைநாதன் எனும் அன்பு அத்தானில் இவருக்கு அளவுமிகு பிரியம் இருந்தது. கோமளவதி, சுசீலாதேவி, நாகநந்தினியின் அன்பு மைத்துனருமாவார். முகுந்தன், கேசவன், ஜெகன் எனும் மருமக்களையும், ஹரிதாஸ், மணிமேகலையின் சித்தப்பாவும், சந்திரலதா, நிர்மலன், மனோகரன், நிறஞ்சன், கோபிகா, யதுஷனாவின் அன்பு மாமனாரும், கஜேந்திரன், கிரிஷாந்தன், நிவேதா, அருணேஸ் ஆகியோரின் பெரியப்பாவு மாகத் திகழ்ந்தார்.

வனிதாதேவி, சோமாவதி, மல்லிகா, சண்முகநாதன், அற்புதநாதன் ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை கல்வயல் ஸ்ரீ சண்முகாநந்தா வித்தியாலத்திலும், பின் உயர்கல்வியை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் கற்றார். தனக்கேயுரிய தன்சொந்த தொழில் ஸ்தாபனமாகிய "ஜோதி புடைவை நிலையம்" அதனில் தன் தொழிலை மேற்கொண்டு வந்தார். தனது கடையின் பெயரிலேயே தனக்கு மனைவி அமைந்தது என்பதில் இவருக்கு அதிகளவு மகிழ்ச்சியிருந்தது. கடையின் பெயரை ஒருபோதும் மாற்றுவ தில்லை என்ற நல்லெண்ணத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார். யாவர்க்கும் உதவி செய்யும் மனப்பாங்கு இவரிடத்தில் அன்றுதொட்டு இருந்து வந்த ஒன்று. எல்லோரிடத்திலும் மிகவும் அன்பாகக் கதைப்பதைவிட யாரையும் வெறுத்து நடக்கவில்லை.

இடப்பெயர்வு ஏற்பட்ட காலத்திலேயே இவருக்கு Pressure ஏற்பட்டது. இருந்தாலும் அவர் தனது சொந்தக் கடையை வாடகைக்குக் கொடுத்து தனது மனைவி, பிள்ளைகளுடன் சொந்த வீட்டில் எதுவித குறையுமின்றி மகிழ்ச்சியாக தனது வாழ்நாளைக் கழித்துவந்தார். பிள்ளைகளை ஒருபோதும் இவர் கண்டித்து வளர்க்கவில்லை. மனைவியுடனும் சச்சரவுகள் ஏதுமின்றி, மிகுந்த சிறப்பான குடும்ப வாழ்வை மேற்கொண்டார். பின்பு இறுதியில் அன்பு மனைவி கதற, பிள்ளைகள் துடிக்க, சுற்றமும் உறவும் துடித்துத் துவள அனைத்துமே சோகம் எய்திட இவ்வுலகில் எமையெல்லாம் விட்டே பெருங்குளப் பிள்ளையாரின் பாத நிழலில் இணைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் சிகரம் எங்கள் அப்பா...

சைவ நற்குலத்தில் தங்க நற்குணம் நிறைந்த எம் சிவகோசரி (சிவா) என்றுமே நிறைவானவர். தங்க நற்குணம் நிறைந்த தகைசால்பு நிறை சிவாவின் நற்புதல்வர்கள் நால்வரை நானிலம் போற்றிடப் பெற்றெடுத்த பெருந்தகையான். சுற்றம் தழுவி ஒற்றுமை பேணி நற்பணி பற்பல பெற்றிட அறத்துடன் அன்பினை ஊட்டி வளர்த்த எம் அப்பா

இன்னும் உங்கள் பற்பல நற்செயலைப் பலரும் நினைவுகூர எமக்கு ஆறாது உம் பிரிவு. நற்குணம் நிரம்பிய நற்பிதாவே உம்மை நினைக்காத கணமில்லை.

மறந்தால்தானே அப்பா உங்களை நினைப்பதற்கு? எதுவித கஷ்டங்களையுமே அறியாமல் வளர்த்தெடுத்த உங்கள் அன்பு நினைவுகளுடனேயே நாம் என்றென்றும் வாழ்வோம். வார்த்தைகளால் வடிவமைத்து முடியாது எங்கள் குட்டி அப்பாவின் ஞாபகங்கள்.

என்றுமே எங்களுடன் வாழ மீண்டும் எம்மிடத்தே வர எல்லாம் வல்ல பெருங்குளப் பிள்ளையாரை வேண்டு கிறோம்.

**உமதருமை**

**மனைவி, மழலைகள், மருமகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் அன்பு அப்பாவிற்கு சமர்ப்பணம்...**

**இலங்கையில் ஏற்பட்டுவரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி....**

வளர்முக நாடுகளில் தொழில்நுட்பத்தை விருத்தி செய்யும் நடவடிக்கைகளும் அதனூடாக சர்வதேச பொருளாதாரத்தை பெருக்கும் முயற்சிகளும் அரச மட்டத்தில் துரிதமாக முன்னெடுக்கப்பட்டுவரும் சமகாலத்தில் அத்தகைய பணியில் இலங்கையும் ஆர்வத்துடனும் அதிக எதிர்பார்ப்புடனும் களமிறங்கியுள்ளது. இலங்கையின் பிரதான பொருளாதார மூலமாக ஏற்றுமதி வர்த்தகம் விளங்குவதுடன் இவ் ஏற்றுமதிக்கென மேற்கொள்ளப்படும் கைத்தொழிற் துறைகள் விரிந்த பகுதியைக் கொண்டதாகவும் விளங்குகின்றன.



இலங்கையின் உள்நாட்டு உற்பத்திகள் 54 வீத வளர்ச்சியை கடந்த 2003ல் காண்பித்த போதிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறை குறிப்பாக கணணி மென்பொருள் தயாரிப்புத் துறை இவ்வளர்ச்சிகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருக்கவில்லை. இலங்கையில் கணணி மென்பொருள் துறை மிகக் குறைந்த வேகத்திலேயே வளர்ச்சி கண்டு வருகின்றது. உள்ளூர்த் தேவைகளுக்காகவும், குறைந்தளவிலான வெளிநாட்டு ஏற்றுமதி களுக்காகவும் தயாரிக்கப்படும் மென்பொருள்களினூடாக 1996 வரை 5 மில்லியன் அமெரிக்க டொலர்களும், 2001 வரை 58 மில்லியன் அமெரிக்க டொலர்களும், 2003 வரை 80 அமெரிக்க டொலர்களும் இலங்கைக்கு வருமானமாகக் கிடைத்தன.

2010இல் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானத்தை இம்மென்பொருள்துறை மூலமாக ஈட்டிக் கொள்ள முடியும் என தற்போது பொருளியலாளர்களால் எதிர்வு கூறப்பட்டுள்ளது. உள்நாட்டுச் சந்தைகளுக்காகவும், ஏற்றுமதிகளுக்காகவும் மென்பொருள் உற்பத்திகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுவரும் 200க்கு மேற்பட்ட மென்பொருள் அபிவிருத்தி நிறுவனங்கள் இலங்கையில் உள்ளன. அத்துடன் புகழ்பெற்ற மைக்ரோசொப்ட் மற்றும் ஓராகிள் ஆகிய நிறுவனங்களும் தமது அலுவலகங்களை இலங்கையின் தலைநகரில் திறந்துள்ளன. இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் திறந்த மட்டங்களில் போட்டிகளை நடாத்தி, தமது சொந்த உற்பத்திகளுக்காக பிரசார மற்றும் ஆர்வலர்களை இனங்கண்டு அவர்களை விருப்பமான துறைகளில் ஊக்குவிக்கும் பணிகளிலும் ஆர்வம் காட்டி வருகின்றன. தற்போது உலகில் வரும் திறந்த வள மென்பொருள் முறைமை (Open Source Software System) இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துறையை எழுச்சிபெறச் செய்வதற்கும், பூகோளக் கணணித்துறையில் இலங்கை முன்னணி வகிப்பதற்குமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

திறந்த வள செயற்றிட்டங்களில் பங்கு கொள்ளும் பெரும்பாலான கணிணி அபிவிருத்தியாளர்கள் அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டவர்களாக இருக்கின்ற அதேவேளை, வெகு சொற்பமான சிலரே ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். எனினும் இம் உண்மை இலங்கையைப் பெருமளவு பாதிக்கவில்லையாயினும் மென்பொருள் உற்பத்தியாளர்களின் தோற்றமும் அதிகரிப்பும் இலங்கையில் மிகக்குறைந்த அளவிலேயே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். லங்கா மென்பொருள் ஸ்தாபனம் (டுயமெய ளுழகவறயசந குழரனெயவழைn) என்பது திறந்த வள உலகினால் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தி அதனூடாக இலங்கைக்கு உதவுவதற்கென உருவாக்கப்பட்ட இலாபநோக்கமற்ற அமைப்பாகும். இவ் ஸ்தாபனம் கொழும்பு மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களிலும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திலும் (SLIIT) உள்ள ஆய்வுகூடங்களை அபிவிருத்தி செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் ஜாவா, சி ப்ளஸ் மொழிகளிலான செயற்றிட்டங்களிலும் பங்கெடுத்து வருகின்றது.

இலங்கையில் அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் மாற்றங்களும் கணிணி அபிவிருத்திப் பணிகளும் அதன் தொழிநுட்ப விருத்திக்கான புதிய அணுகுமுறைகளை இனங் காண்பித்துள்ளன. இவ்வணுகு முறைகள் புதிய மென்பொருள் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக்கூடிய திறன் விருத்தி செய்யப்பட்ட உலகத் தரம் வாய்ந்த அதிக மென்பொருள் கட்டுமானப் பயிற்சியாளர்களை உருவாக்கும் என்ற நம்பிகை பரவலாக ஏற்பட்டு வருகின்றது. 1996 இலிருந்து உலகின் நவீன தகவல் தொழில்நுட்பங்களை உள்வாங்கிக் கொள்வதில் இலங்கை ஆர்வம் காட்டி வருகின்றது. 1985 களுக்குப் பின்புதான் கணிணிப் பாவனை இலங்கையில் அறிமுகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பரவலாக அது பாவனைக்கு வந்தது 1966க்குப் பிறகுதான். தற்போதைய நிலையில் ஒரு நிறுவனத்துக்கு அல்லது ஓர் அலுவலகத்துக்கு அவசியப்படும் முதன்மைத் தளபாடமாக கணிணி மாறிவிட்டது. இது இலங்கையின் தொழிநுட்ப வளர்ச்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவ்வாறே தமக்கென மின்னஞ்சலையும் இணையத்தளத்தையும் கொண்டிருக்கும் நிலையை ஒவ்வொரு நிறுவனமும் அதற்கு மேல் தனிநபரும் பெற்றுள்ளனர்.

இணையத்தை தமது கல்வி, பொருளாதார மற்றும் பொழுதுபோக்குத் தேவைகளுக்காகவும் பயன்படுத்தும் வழக்கத்தை நகர்ப்புறத்தில் உள்ள பொரும்பாலானோரும் கிராமப்புறங்களில் உள்ள சிறுதொகையினரும் கொண்டிருக்கின்றனர். இணையத்தள பாவனை மிகவேகமாக வளர்ந்து வரும் நடைமுறையாக சராசரியாக இலங்கை முழுவதும் அவதானிக்கப்படுகின்றது. 1996 இல் 2504 ஆக இருந்த இணையக் கணக்குகள் (Internet Account) 2003 இல் 85000 ஆகவும், 2008 இல் 200000 ஆகவும் அதிகரித்துள்ளது. 2000க்கு முன்னர் சுமார் 5 வருடங்களாக ஏற்பட்டு வந்த அதிகரிப்பு வீதத்திலும் பார்க்க கூடிய அதிகரிப்பை கடந்த 2008ன் ஒரே ஆண்டில் மட்டும் அவதானிக்க முடியுமாக இருக்கின்றமை விசேட அம்சமாகும். இவ்வதிகரிப்புக்கான சாத்தியங்களில் தனிநபர் கணிணிப்பாவனை இலங்கையில் முதலீடு செய்வதில் காண்பிக்கும் போட்டி அதற்காக வழங்கும் சலுகைகள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.

எனினும் அயல் நாடான இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வளர்ச்சி வேகம் என்பது மிகத் தாமதமாகவே நிகழ்ந்து வருகின்றது. ஏனெனில் தகவல் தொழில்நுட்பத் துறையில் இந்தியாவானது அமெரிக்காவுக்கு போட்டியாக எழுந்து நிற்கும் நாடாகும். அமெரிக்காவின் பொருளாதாரத்துறை விருத்திக்கான பெரும் பங்களிப்பை தகவல் தொழில்நுட்பத்துறை வழங்குகின்ற போதிலும் அமெரிக்காவின் தகவல் தொழிநுட்பத்துறையில் பெரும் பங்கு வகிப்போர் இந்தியர்களாவர். அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை இந்தியாவில் கற்று உயர்கல்விக்காக அமெரிக்காவுக்குச் சென்று அங்கு தமது கற்கை நெறியைப் பூர்த்தி செய்து உயர்ந்த சம்பளத்துடன் ஒரு வேலையைத் தேடிக்கொண்டு அங்கேயே குடியமர்ந்தவர்கள். இன்று அந்த இந்தியர்கள் இல்லையெனில் அமெரிக்காவின் தகவல் தொழில்நுட்பத்துறை ஒரேயடியாக கீழே விழுந்துவிடும் என்ற நிலையுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மிகத் தாமதமாகவே தோன்றியதெனினும் மிகத் துரித வளர்ச்சி கண்ட நாடாகும். இந்தியாவில் 3000க்கு மேற்பட்ட நிறுவனங்கள் மென்பொருள் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றன. 1996ல் 734 அமெரிக்க டொலர்களாக இருந்த மென்பொருள் ஏற்றுமதி வர்த்தகம் 2001ல் 6200 மில்லியனாக வளர்ந்தது. 2001ல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்கள் வருமானத்தை இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத்துறை ஈட்டியுள்ளது. இந்தியாவின் பெரும்பாலான திணைக்களங்கள் தகவல் தொழில்நுட்பத்தினூடாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான நகரங்களில் பொலிஸ் சேவைகள் மற்றும் நிருவாக சேவைகள், நீர்க்கட்டணம், மின்சாரக்கட்டணம், தொலைபேசிக்கட்டணம் மற்றும் வரிகள் முதலான கட்டணச் செலுத்தல்கள் என்பன இன்டர்நெட் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. அயினும் உண்மையில் இந்தியா கணிணித்துறையில் பெருவளர்ச்சி கண்ட ஒரு நாடு அல்ல. உலகவங்கி 2001ல் வெளியிட்ட மதிப்பீட்டு அறிக்கையொன்று கணிணிப் பாவனையாளர்களை அதிகமாகக் கொண்ட முதல் 14 நாடுகளைப் பட்டியலிட்டிருந்தது.

அதில் 1000 பேருக்கு 510 பேர் தொடர்ச்சியாகக் கணிணியைப் பயன்படுத்துவோர் எனும் விகிதத்தில் அமெரிக்கா முதலிடத்திலும், 1000 பேருக்கு 360 பேர் எனும் விகிதத்தில் கனடா இரண்டாம் இடத்திலும், 1000 பேருக்கு 297 பேர் எனும் விகிதத்தில் ஹொங்கொங் மூன்றாம் இடத்திலும் இடம் பிடிக்க, இந்தியாவோ 1000 பேருக்கு 3 பேர் எனும் விகிதத்தில் இறுதி ஸ்தானத்தையே பெற்றிருந்தது. இது தவிர இன்டர்நெட் மற்றும் தகவல் தொழிநுட்பச் சாதனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை, மற்றும் இன்டர்நெட் பாவனைகள், வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை என்பனவற்றின் அடிப்படையில் "குளோபல் இன்போர்மேஷன் டெக்னோலஜி" எனும் அமைப்பு 2007 இல் வெளியிட்ட தரப்படுத்தல் ஒன்றில் டென்மார்க், சுவீடன், சிங்கப்பூர், பின்லாந்து, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, ஐஸ்லாந்து, பிரித்தானியா, நோர்வே என்பன முறையே உலகின் முதற்பத்து (டொப்டென்) நாடுகளாக குறிப்பிடப்பட்டிருப்பதுடன் இந்தியா 44ம் இடத்தையும் இலங்கை 86ம் இடத்தையும் பெற்றிருந்தன.

இத்தகைய தரப்படுத்தல்களில் முதனிலை நோக்கி முன்னேற வேண்டுமாயின் அதற்காக இலங்கை கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மற்றும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களும் கொள்கைகளும் இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சியில் தாக்கம் செலுத்தத் தொடங்கி விட்டுள்ள நிலையில் அவற்றுக்கு மேலதிகமாக துறை சார்ந்த விற்பன்னர்களையும் நிபுணர்களையும் உருவாக்குவதற்கும் இலங்கை அரசு துரித முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப பாடவிதானங்களள், இலங்கையின் கணிணிப் பாவனையின் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகியுள்ளன. பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும், கணிணி கற்கை நிலையங்களிலும், கணிணி ஆய்வுகூடங்களையும் அமைப்பதற்காக திறைசேரியின் ஊடாக நிதி ஒதுக்கி இலவச கருவிகளையும் வழங்குவதற்கும், அவற்றில் கற்பிக்கும் ஆசிரியர்களை இலவசக் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் மூலம் வளப்படுத்துவதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


இதைத் தவிர இவ்வாண்டு தகவல் தொழிநுட்ப ஆண்டாகப் பிரகடனப்படுத்தப் பட்டமையும், ஈ-ஶ்ரீலங்கா உள்ளிட்ட முன்மொழிவுகளுக்கும் இலங்கையின் தகவல் தொழிநுட்பத்தை விருத்தி செய்வதற்கான சிறந்த முயற்சிகளாக விளங்குகின்றன. இத்தகைய திட்டங்களின் பயனாக மூத்த தலைமுறையினர் தவிர்ந்த ஏனையோர் தகவல் தொழிநுட்பத்துடன் மிகச் சிறியளவிலேனும் பரிச்சயம் கொண்டவர்களாக மாறி வருகின்றனர். குறிப்பாக சிறுவர்கள் தமது கல்வி, பொழுதுபோக்குத் தேவைகளுக்காக கணிணியைப் பயன்படுத்தும் வீதமும் அதிகரித்து வருகின்றது.

இத்தகைய ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்துவதில் இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதற்காக அரசுக்கு நன்றி செலுத்த வேண்டியதுடன் வழங்கப்படுகின்ற இத்தகைய பெரும் வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்தி தமது துறைசார் திறனையும் தகைமையையும் வளர்த்துக் கொண்டு அவற்றினூடாக தமக்கும் தமது தாய்நாட்டுக்கும் பெருமை சேர்ப்பது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் பாடுபடுவதும் இலங்கை மக்கள் அனைவர் மீதுமுள்ள முக்கிய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தன்னம்பிக்கை வார்த்தைகள்



இலட்சியத்தில் வெற்றி பெறுவோம் என்ற உறுதி மட்டும் இருந்தால் போதும் உங்கள் பணிக்கு மட்டும் முதலிடம் கொடுத்து உழையுங்கள். தன்னம்பிக்கைதான் உங்கள் வாழ்க்கையைப் பாதுகாப்பான வாழ்க்கையாக மாற்றித் தருகின்றது என்பதை மறவாதீர்கள். வெற்றியைச் சந்திக்காமல் திரும்பமாட்டேன் என்ற உங்களது உறுதி ஒன்றே எப்பொழுதும் கைவிளக்காக இருக்க வேண்டும் என்னும் உங்களுடைய திடமான எண்ணம்தான் வேறு "வெற்றி பெற வேண்டும்" எந்தக் காரியத்தையும் விட மிக மிக முக்கியமானது. மிக இக்கட்டான சூழ்நிலைகளில் "நான் தோற்று விடுவேனா?" என்று சிந்திக்காதீர்கள். நான் வெல்வேன் என்று நம்புங்கள். அப்போதுதான் பிரச்சினைகளை வெல்ல வழி பிறக்கும். வீட்டிலும், வேலையிலும், வெளியிலும் நான் வெற்றி பெறுவேன் என்கிற மனநிலையே உங்களை வெற்றிபெறச் செய்துவிடும். எதையும் ஒரு திட்டத்தோடு மட்டும் தொடங்காதீர்கள். செயலோடும் தொடங்குங்கள்.

சிந்தனை செய்யுங்கள். முடியும் என்ற மாறாத தன்னம்பிக்கையுடனே உங்களுடைய சிந்தனை அமைந்திருக்கட்டும். இந்த மனப்பபான்மையிலிருந்து மாறி விடாமல் சிந்தித்ததைச் செயலில் காட்ட மிகுந்த மகிழ்ச்சியுடன் உழையுங்கள். அருகில் வெற்றி மிக இருப்பதை உணர்வீர்கள். தாழ்வு மனப்பான்மை வேண்டாம். அனைத்தையும் வெல்ல முடியும். வெற்றியைப் பற்றிய சிந்தனையுடன் செயற்படுங்கள். தோல்வி, வெறுப்பு, அவநம்பிக்கை ஆகியவற்றுக்கு இடமளிக்காமல் வெற்றியை மட்டுமே சிந்தித்து உயர்வடையுங்கள். உங்களுடைய கவனம் முழுவதும் உங்களின் இலட்சியத்தை நோக்கித்தான் இருக்க வேண்டும். தடைகள் எதிர்ப்படும் பொழுது இலட்சியத்திலிருந்து உங்கள் மனத்தையும், செயலையும் பின்வாங்கி விடாதீர்கள். இவையெல்லாம் உங்கள் உறுதியை சோதிக்க வந்தவை என்று கருதி அந்த தடைகளையும் தாண்டி உங்களுடைய உயர்ந்த இலட்சியத்தை அடையுங்கள்.

வெற்றியைக் கற்பனையில் நம்பிக்கையுடன் பார்க்கும் திறன், என்னால் முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை, உறுதியாக வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவேண்டும் என்ற செயல் வேகம், எது வேண்டும் என்றாலும் பொறுமையுடன் விடாப்புடியாக முயற்சி செய்யும் குணம் இந்த நான்கும் உள்ளவரே தன்னம்பிக்கையுள்ள மனிதர். நம்முடைய வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பது மனவளர்ச்சியா, மனவளர்ச்சி இன்மையோ அல்ல. நல்லதே நடக்கும் என்ற மனோபாவம்தான். எனவே எப்போதும் உண்மையான ஆர்வத்துடனும் வெற்றிக்காக உழையுங்கள். நம்முடைய உழைக்கும் நேரம் நாள்தோறும் அதிகரிக்க வேண்டும். அதற்கு ஏற்றபடி நமது சிந்தனை, செயல் வேகம் ஆகியவை இருக்க வேண்டும். முயற்சியை எவனொருவன் எப்பொழுது கைவிடுகின்றானோ அப்பொழுதே அவனது சக்தி முழுவதும் அவனிடமிருந்து பறந்து போய்விடுகின்றது.

அரிய சாதனைகள் செய்யப்படுவது வலிமையினால் அல்ல. விடாமுயற்சியினால் தான். வெற்றியின் இரகசியம் "கடின உழைப்பு" என்ற சொற்களில் தான் அடங்கி இருக்கின்றது. நம்பிக்கையும் உற்சாகமும் மட்டும் இருந்தால் போதும் வெற்றி இலக்கை அடைந்து விடலாம். வெற்றி பெறுகின்றவனின் ஒரே மந்திரச்சொல் "இப்பொழுது" தோல்வி அடைகின்றவனின் ஒரே சாபச்சொல் "பிறகு". வெற்றி பெற்றே தீர வேண்டும். எனவே எதையும் தள்ளிப்போடாதீர்கள்.

பிரச்சினைகள்தாம் மிகப்பெரிய சாதனைகளையும், உறுதிமிக்க சாதனையாளர்களையும் உருவாக்குகின்றன. எனவே பிரச்சினைகளை விருப்பத்துடன் எதிர்கொள்ளுங்கள். தோல்வி மனச்சோர்வை அளிப்பதில்லை. மாறாக அது என்னை மேலும் மேலும் ஊக்குவிக்கிறது. எவ்வளவுதான் கல்வியும், செல்வமும் இருந்தாலும் ஒருவனால் வெற்றி பெறமுடியாது. தோல்விகளைக் கண்டு அஞ்சாமல் தொடர்ந்து முயற்சி செய்யும் ஊக்கம் அவனிடம் இருந்தால் தான் முன்னேற முடியும். வெற்றி பெற முடியும். இந்த ஊக்கம் இருந்தால் கல்வியறிவு இல்லாதவனும் பொருள்வசதி இல்லாதவனும் கூட முன்னேறுவது உறுதி. முன்னேற முயற்சியை, உழைப்பை, அறிவை, ஒழுக்கத்தை நம்புங்கள். இதைத் தவிர வேறு எதை நம்பினாலும் முன்னேற முடியாது. அறிவுக்கு இந்த உலகம் எப்போதும் வணங்கும். திறமைக்கு இருகரம் நீட்டி ஆதரவு தரும். தூய்மையான உள்ளத்திற்கு மிகுந்த வரவேற்புத் தரும்.

வேதனையை மனோபலத்துடன் எதிர்கொள்ள முடிந்தால் எப்படிப்பட்ட துக்கத்தையும் தாங்கிக் கொள்ள முடியும். வாழ்க்கையை அதன்போக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொண்டு முடிந்தவரை மகிழ்ச்சியாக இருக்க முயற்சிக்க வேண்டும். பிரச்சினையைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிராமல் அதை எதிர் கொள்வது எப்படி என்று நீங்கள் யோசிக்க ஆரம்பித்தாலே போதும். குழப்பநிலையிலிருந்து நீங்கள் வெளியில் வந்துவிட்டதாக அர்த்தம். இந்த நிலையில்தான் நீங்கள் சரியான முடிவுகளை, சரியான நேரத்தில் எடுக்க வேண்டியிருக்கும்.

முயற்சிகள் தொடரும்போது ஆற்றல் வெளிப்படத் தொடங்குகின்றது. முயற்சி விடாமுயற்சியாகும் போது ஆற்றல் வலிமை பெறுகிறது. ஆற்றல் வலிமை பெறுகின்றபோது மனத்தளர்வில் ஏற்பட்ட தடைகள் தகர்ந்து போகின்றன. நான் விரும்பிய துறை கிடைக்கவில்லை. ஆகவே என்னுடைய ஆற்றல் வெளிப்பட வழியில்லை என எண்ணுவது தவறு. அவ்வாறு எண்ணுகின்ற மனிதன் தன்னுடைய ஆற்றலுக்குத் தானே தடை விதித்துக் கொள்ளுகிறவன் என்றுதான் கருத வேண்டும். கதவைத் தட்டி வாய்ப்புக்கள் தங்களை அறிவித்துக் கொள்ளதில்லை. நாம் தான் வாய்ப்புக்களின் கதவைத் தட்டி திறக்க வைத்து அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாய்ப்பு சிறிதாயினும், பெரிதாயினும் உங்களுடைய முழுத்திறமையைக் காட்டி செயற்படுங்கள். அப்போது உங்கள் ஆற்றல் வளர்ந்து கூர்மையடைவதை உணரலாம்.

தன் திறமையில் சந்தேகம், பயம், சோம்பல், வேண்டாத வீணான கற்பனை, கீழ்நிலையில் உள்ளவர்களின் துன்பத்தைப் பற்றியே தொடர்ந்து நினைத்துக் கொண்டிருப்பது, ஆரம்பத்திலேயே வெற்றியின் அறிகுறியை எதிர்பார்ப்பது, சிறுதடை என்றாலும் மனமுடைந்து போவது, இவை போன்ற காரணங்களால் ஒருவருக்குத் தோல்வி மனப்பான்மை ஏற்பட்டு விடுகிறது. மனஉறுதியென்பது நமக்கு நாமே உண்மையோடும், நம்பிக்கையோடும் உண்டாக்கி கொள்வதுதான். விழுவதில் தவறில்லை. விழுந்த பின்பும் அமைதியாய் இருப்பதுதான் தவறு. விழுந்த பின்பு மீண்டும் எழுந்து நடப்பதில்தான் நமது வெற்றியின் ரகசியமே உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். மூடிய கதவுகளை முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்காதீர்கள். அதையே நினைத்து நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்காதீர்கள். திறந்திருக்கும் கதவுகளை தேட முயலுங்கள். ஒவ்வொரு வினாடியும் முன்னேற வேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் மனிதனுடைய கால்கள் முன்னோக்கி நடக்கும் விதத்தில் அமைத்திருக்கின்றார்.

பார்க்கின்ற பொருட்களில் மகிழ்ச்சியில்லை. அந்தப் பொருளை பார்க்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநிலையில் தான் மகிழ்ச்சி இருக்கின்றது. முயற்சி என்னும் விளைநிலத்தில் உழைப்பு என்னும் இரயில் வெற்றி எனும் இடத்தை அடைய வேண்டுமானால் உற்சாகம் என்னும் பச்சை விளக்கு எப்பொழுதும் எரிந்து கொண்டே இருக்க வேண்டும். தாமதிப்பதால் நம் ஒளியை வீணாக்குகின்றோம். அது பகலில் விளக்குகளை எரிப்பதற்குச் சமம். தாமதம் செய்து கொண்டிருப்பவர்களும், தடுமாறிக் கொண்டிருப்பவர்களும் ஒருபோதும் செயலில் துணிந்து இறங்க மாட்டார்கள். ஒரு முக்கியமான காரியத்தை நாம் விரும்பி ஏற்றுக் கொண்டு விட்ட பின்பு யாருடைய அபிப்பிராயத்துக்காகவும் காத்துக் கொண்டு இருக்கக்கூடாது. யாருடைய பேச்சைக் கேட்டும் இடையில் காரியத்தை நிறுத்தி விடுவதும் சரியல்ல. நாம் மேற்கொள்ள வேண்டிய காரியங்களைப் பற்றி நாம் ஆலொசனை செய்து பார்க்க வேண்டிய சந்தர்பங்களும் உண்டு. செயல் புரியாமல் சோம்பி இருப்பவர்கள் செத்துப்போன சவத்துக்கு ஒப்பானவர்கள்.

முன்னேற்றப்பாதைக்கு அகத்தூண்டுதல் ஒரு சதவிகிதம் வியர்வை சிந்துதல் 99 சதவிகிதம் - எடிசன்.

சுறுசுறுப்பு என்பது ஒரு செயலை நோக்கி தேக்கமில்லாமல், மந்தமில்லாமல் அதே சமயத்தில் அமைதியோடு முன்னேறும் (முன்னேற்றும்) உன்னத நிலையாகும். நாம் முன்னேற்றமடைந்து உயர்வடைவதை நம்மைத் தவிர வேறு எவராலும் தடுத்துவிட முடியாது.

எந்தத் தொழிலும் வெற்றி பெறக் கூடியவர்கள் தங்களுடைய வேலை நேரத்தை அதிகப்படுத்திக்கொள்ள விரும்புவர்கள். - ஆண்ட்ரு கார்னீகி

ஊதியத்திற்கு மேற்பட்ட உழைப்பைச் செய்வதன் மூலம் நமக்கு நாமே பெரிய உதவியை செய்து கொள்ளுகின்றோம். ஒரு இடத்திற்கு போக வேண்டுமானால் இருக்கின்ற இடத்தைவிட்டுத்தான் செல்ல வேண்டும். ஆக உயர்ந்த குறிக்கோளை அடைய வேண்டுமெனில் சில இன்பங்களை மறந்துதான் ஆகவேண்டும். 'இன்று' என்பது நம்மிடம் உள்ள ஒரு பணநோட்டு போன்றது. அதனை எப்படி வேண்டுமானாலும் நம்மால் செலவு செய்ய முடியும். 'நாளை' என்பது பின்தேதியிட்ட காசோலை போன்றது. அந்தத் தேதி வரும்வரை நம்மால் அதனைக் காசாக்க முடியாது. இன்று அது வெறும் தாளுக்குச் சமம்.

தோல்வியை சந்திக்க நேரும் போது அதிருப்தி ஏற்படுவது இயற்கைதான். ஆனால் அந்த அதிருப்தியானது உங்களை இயலாதவர்களாக, அவமானப்பட்டவர்களாக உருமாற்றும் முன்பே அதை "பிடிவாதமாக" மாற்றிக் கொள்ளுங்கள். எதையோ சாதிப்பதற்காக நீங்கள் பிறந்திருக்கிறீர்கள். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவென்று தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். உங்களுடைய வேதனைகளை நினைத்து வருத்தப்படாதீர்கள். அப்படி வருத்தப்பட்டாலும் அதை வெளியில் சொல்லாதீர்கள். முக்கியமாக 'சுய இரக்கம்' என்பது கூடாது.

உங்களை யாராவது விரும்பாவிட்டாலும் அது அவர்களுடைய பிரச்சினை. அதுபற்றி நீங்கள் வருத்தப்பட வேண்டிய தேவை இல்லை. மற்றவர்கள் உங்களுடன் கழிக்கப்போகும் நேரம் ரொம்பக் குறைவுதான். ஆனால் உங்களுடன் நீங்கள் 24 மணி நேரம் கழிக்க வேண்டியிருக்கும். உங்களுடைய கம்பனி உங்களுக்கு பிடித்தமானதாக இருக்க வேண்டும். விரும்பியதை யாராலும் பெறமுடியும். முயன்றால் முடியாதது இல்லை. யாரையும் நம்மைவிட தாழ்ந்தவர்களாக எண்ணிவிடக் கூடாது. நீங்கள் பணிபுரியும் இடத்தில் உங்களை மிகவும் முக்கியமானவராக தவிர்க்க இயலாதவராக மாற்றிக் கொள்ளுங்கள். இனிமையான பேச்சுக்களின் மறுபதிப்பாக இருங்கள்.

ஒரு மனிதனுக்குத் தேவை தன்னம்பிக்கை மட்டுமே. தன்னம்பிக்கையே அவனை முழுவேகத்தில் செயற்படவைத்து தடைகளையும் தாண்டி வலிமையுடன் வெற்றியைச் சந்திக்க வைக்கின்றது. எல்லாக் கவலைகளையும் மறக்கவும், கவலையே இல்லாமல் வாழவும் தன்னம்பிக்கையுடன் சிந்தியுங்கள். வழி பிறக்கும். "தோல்வி உறுதி" என்கிற நிலையிலும் போராடத் துணிந்தவனே உண்மையான வீரன். "வெற்றி பெறுவோம்" என்று நம்புங்கள். இறுதிவரை போராடுங்கள். விடாமல் முயற்சி செய்யுங்கள். வெற்றி பெறுவீர்கள்.

- முசெலினி தன் மேஜை மீது வைத்திருந்த பொன்மொழி

மனதைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இலட்சியத்தை அடையும்வரை நமது மனமும் செயலும் இலட்சியத்தை நோக்கியே சென்று கொண்டிருக்க வேண்டும். முதலில் கடினமாகத் தோன்றினாலும் மனப்பழக்கத்தினால் நம்முடைய பணிகளை வெகு எளிதாக தொடர்ந்து செய்ய முடியும். கடினமான வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியைக் காணும் மனநிலை கொண்டவர்கள் எப்போதும் வெற்றியையும் அதன் மூலம் புகழையும் பெறுகின்றார்கள். மனம் சோர்ந்து போனால் நீங்கள் இதுவரை பெற்ற வெற்றிகளை நினைத்துப் பாருங்கள். உங்கள் நண்பர்கள் உங்களைப் பாராட்டிய அம்சங்களை நினைவிற்கு கொண்டு வாருங்கள். நாம் எழுந்து உறுதியுடன் எடுத்து வைக்கும் முயற்சிகளில் தான் நம்பிக்கையும் வெற்றியும் உள்ளன.

சிவகோசரி ஜனகன்
IDM City Campus - சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எங்கள் அன்புத் தெய்வங்களாகிய பப்பா, அம்மா, குருநாதன் கோடி நமஸ்காரம் சொல்லி மலர்ப்பாதங்களை வணங்குகின்றேன்.**

எனது அன்புத் தம்பியின் பிரிவால் ஏற்பட்ட மனக்குமுறல்களை இந்த ஆத்மசாந்திக் கிரியையில் உங்கள் எல்லோருடனும் பகிர்ந்து கொள்ள விரும்பி இதை எழுதுகின்றேன். எப்படியாவது உவ்விடம் வந்துவிட வேண்டுமென்று துடிதுடியாத் துடித்தேன். சிறையில் அடைபட்ட குருவி போல் என் ஆசை நிறைவேறவில்லை. என் அன்புத்தம்பியே எங்களுக்கு ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் எங்கு போனீர். அக்கா அக்கா அன்புடன் கூப்பிடுவீர். அக்கா என்று கூப்பிடும் சத்தம் என் காதில் விழுகுதையா, கண்ணீர் அரும்புதையா, கையும் எழுதமுடியாமல் கண்டபடி போகுதையா உம்மைப்பற்றப் சொல்லப்போனால் ஆண்டாண்டு சென்றாலும் முடியாதப்பா. எங்கள் பப்பாவும் அம்மாவும் தெய்வங்களாக வளர்த்தெடுத்த குடும்பமப்பா. ஞானப்பால் ஊட்டி நன்னெறி ஒழுகச் செய்தார்கள். நானும் பெருமையுடன் நாலு தம்பியிருக்கும் பொழுது எனக்கு என்ன குறையென்று பெருமையுடன் இருந்தேன். எங்கள் குடும்பத்தில் நீங்கள் தான் புஷ்டியான பிள்ளையப்பா. உனக்கேன் இந்தக்கதி வந்ததென்று தெரியவில்லை. அம்மா உனைக் குளிக்க வார்த்து பொட்டும் போட்டு தொட்டில் போட்டுவிட்டு சமைக்கப் போவா. இவ்விடமிருந்து ஏங்கி ஏங்கி அழுதுகொண்டிருக்கும் நான் தானே பாட்டுப்பாடி உன்னைத் தூங்க வைப்பேன். பாட்டுக் கேட்டதும் அழுகை நின்று அமைதியாய் தூங்கிடுவீர். கண்ணே கண்மணியே கண்ணுறங்காய் என்றது மட்டும் ஞாபகமிருக்கின்றது. என் கண்மணியை பறிகொடுத்து விட்டு கதறியழ வேண்டி வந்துவிட்டது. உன் அண்ணனும் அண்ணியும் போய்விட்டார்கள் என்று நீரும் போய்ச் சேர்ந்தீரோ. உன் அண்ணா என் தெய்வமப்பா. அக்கா என்றபடிதான் 85வயது மட்டும் இருப்பேன் நீ கலங்காதே என்று சொல்லி எங்களை அழவைத்து விட்டு போய்விட்டீர்களே. கடைசியாகக் காணும் நேரங்களில் மயக்கமாகவிருந்தாலும் சிவா சிவா அத்தான் என்று சொன்னாலே காணும் கண் திறந்து பார்த்து சிரித்த காட்சி மாளுதப்பா. எங்களை வழியனுப்பும் நாளில் எங்களுடன் சாப்பிட்டு அத்தானுக்கு அன்பளிப்பும் கொடுத்து விட்டீர்களே.பப்பாவும் எனக்குச் சொல்வார், சிவா சிவா என்று சொன்னால் சிவபெருமானே வந்துவிடுவாரென்று சொல்லி மகிழ்வாரே. அம்மாவும் உங்களை இடைநடுவில் கைவிட்டு சிறப்புக்களைப் பார்க்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டா. அம்மாவின் முடிவை நீங்களும் எடுத்தீர்களோ. உங்கள் கண்மணிகளைக் கலங்கவிட்டு அவர்கள் சிறப்புக்களை பார்க்காமல் போய்விட்டீர்களே! உங்கள் அருமை மகனைத் தம்பி தம்பி என்று சொல்லி மகிழ்வீர்களே. இதை நான் எப்போ கேட்பேன். அக்காவின் பிள்ளைகள் என்றால் அதில் ஒரு தனிப்பாசம். பிள்ளைகளுக்கு பொருள்களைத் தேடிக் கொண்டு வந்து தந்தீர்களே! மாமா மாமா என்று சொல்லி தங்கள் குடும்பங்களுடன் உங்களைப் பார்க்க வந்தார்கள் அம்மாவின் ஒளிவிளக்குகள் அணைந்துவிடப் போகுதென்று நினைத்துதான் வந்தார்களோ? எனக்கு மட்டும் தெரியாமல் போய்விட்டதே! அடுத்தமுறை வந்து எங்கள் தெய்வத்தைப் பார்க்கலாம் என்று ஏமாந்து விட்டேன். இனி என்ன செய்வது சிவபெருமானை நினைத்து ஓம் நமசிவாய என்று சொல்லி உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு அக்கா, அத்தான், பிள்ளைகள்.**

சிவா மாமாவின் நினைவு எங்களை என்றுமே விட்டு அகலாது. சிறுவயதில் அவர்எங்கள் மேல் காட்டிய அன்பும் அக்கறையும் மனதில் பசுமையாக இருக்கின்றது.

அன்று ஒரு நாள் எங்கள் வீட்டில் முன்பு நடந்த அசம்பாவிதத்தையறிந்து எவ்வளவு விரைவாக வந்து எங்கள் இருவரையும் வாரியணைத்து தங்கள் வீட்டிற்கு கூட்டிச் சென்றீர்கள். இதைத் தவிர உங்களைப்பற்றிச் சொல்வதற்கு என்ன இருக்கின்றது. எவ்வளவு காலமாக உங்களைப் பார்க்க முடியாமல் பிரிந்திருந்த நாங்கள் கடைசி நேரம் வந்து பார்த்து விட்டோம். இதுதான் நாங்கள் செய்த பாக்கியம். உங்களை இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கின்றோம்.

**மாமாவின் பாசமுள்ள மருமகன்**
**கேசவன், ஜெகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவா அண்ணா எமக்கோர் அணையா விளக்கு!

அன்புச் சோதரரே!
குமாரசாமி சிவகோசரி திருநாமம் கொண்டவரே!
தாய் தந்தையாய் இருந்தெம்மை வளர்த்தீரே
பாசத்தைக் கொட்டி வளர்த்தீர் - எமக்கு
திருமணமும் செய்து வைத்தீர்
அன்பான அரவணைப்புச் செய்து
ஆறுதலாய் மொழிபேசி
என்னை ஆட்பட வைத்தீரே!
பாதியிலே சென்றது தாங்க முடியவில்லை அண்ணா
ஆறுதலாய் மொழிகூற யாருண்டு?
சுகயீனமுற்றிருந்த வேளையிலும்
பாசமாய்க் கதைத்திடுவீர்
பெரியண்ணா சென்ற இடம் நீரும் தேடிச் சென்றீரோ?
நாங்கள் மீளாத் துயரில் ஆழ்ந்துவிட்டோம்.
ஆறுதல் கூற யாருண்டு?
நந்தினி நந்தினி என்று அழைப்பீர் - இனி
உம்முடைய ஓசை எங்கே கேட்போம்.
எங்கு இருந்தாலும் பாசத்தைக் கொட்டி
எம்மையெல்லாம் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டு
எங்கே சென்றீர்.
உம்முடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்புத் தம்பி**
**நந்தா குடும்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு அண்ணாவே...!

உங்கள் பாசத்தில் - பெரும் பாகம்
தங்கை எனக்கு
எங்கள் இல்லத்தின்
இனியவை அனைத்திலும் இணைந்திருந்தீர்கள்
60வது பிறந்த நாளில்
அகம் மகிழ்ந்து நின்றேன் - இன்று
அகம் நெகிழ்ந்து
ஆத்மா சாந்திக்காக ஆண்டவனை
பிரார்த்திக்கின்றேன்.

**அன்புத் தங்கை,**
**நளாயினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவா மாமா...

அன்பின் வடிவமென்று உங்களைப் பற்றி
ஆசையாய் எழுத வேதனை வேண்டி நிற்கின்றது.
துன்பங்கள் தூண்டுகின்றது.
எதை எழுத என்று, உங்கள் மகனில் என்னைக் காண்பதும்
பள்ளிக்கூடம் செல்ல நான் பழகிய காலங்களில்
கைபிடித்து கவனமாய் கூட்டி சென்ற
கனிவான அந்தக் கணங்களும்
மாமா சிவா மாமா...
இன்னும் எத்தனை நினைத்தாலே
நீண்டு செல்லும்
என் வாழ்வின் உதய காலங்களில்
"மாமா" என்ற உறவுக்குள்
ஒன்றிப்போன உன்னதமான உண்மைகள்.
இவை எல்லாம் உங்கள் அஸ்தமனத்தில்தானா
உயிர்பெற வேண்டும் சிவா மாமா?
மாமா என்ற உறவு என் அம்மாவின்
தம்பி என்பதையும் தாண்டியதே சிவா மாமா

**அன்பு மருமகன்**
**முகுந்தன்.**
**(லண்டன்)**

சிவா நீங்கள் இறக்கவில்லை
பெருங்குளத்து விநாயகருடன் இருக்கின்றார்
அவர் உடல் மறைந்தாலும் அவரின் நினைவு
என்றென்றும் ஒளி வீசும்
ஆத்மா சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

**ஞானக்கா சண்முகநாதன்**
**குடும்பத்தினர்**
**(லண்டன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என் அன்பின் சிவா மச்சான்**

உன் அன்பு முகம் என்கண் முன் நிழலாடுகின்றதே
உன்னைப் பார்க்கும் போது எல்லாம் - என்
அப்பாவின் நினைவுதான் மனதில் வந்ததே
இன்று உன்னையும் பறிகொடுத்து வாடி நிற்கின்றோமே
உன் அன்பான முகமும் உதவி செய்யும் மனமும்
ஆருக்குத்தான் வரும்?
நீதான் இந்தக் குடும்பத்தின் மணி விளக்கு
அதுவும் அணைந்து எங்களை சோகத்தில் ஆழ்த்துகின்றதே
இனி உன் அன்பு முகத்தை எங்கு காண்போம்
உன் கனிவான கருணைக் குரலை என்று கேட்போம்

**உன் அன்பு மச்சான்**
**ஆனந்தி (லண்டன்)**

**அன்பின் சிவா மாமா**

உங்களைக் கொஞ்ச நாட்களே அறிந்து இருந்தாலும்
அந்த கொஞ்ச நாட்களிலே எங்கள் மனதில்
நீங்கா இடம் பிடித்து விட்ட உங்கள் மறைவு
ஆற்ற முடியாத துயரம்
மேலே இருந்து உங்கள் குழந்தைகளையும்
மாமியையும் வாழ்த்தி நீங்களும் சாந்தி அடைவீர்கள்
என்று நம்பி கடவுளைப் பிரார்த்திக்கினறோம்.

**அன்புடன்,**
**நித்தியன், தாரணி, திவி**
**ராசாத்தி**
**(லண்டன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# To the shining star above us SIVA MAMA

Siva mama is a blessing from god, which we were all very fortunate to have living in London. I was unlucky I the sense that I never really saw much of him but from what I have seen, he was a man of great qualities.

My father would always tell me that he reminded him of my grandfather. Siva mama was a very social able and friendly man that always had for every body.

He had the great gift of patience and strong will overcoming any obstacles that stood in his way. I always find it heart breaking when I see him struggling with his terrible illness but I would always praise his strength and patience. He had in prevailing over his struggles.

Siva mama's courageous spirit, selfless attitude and warmth will always be remembered by every one. He was very lucky to have a great family who were always there to care for him when he couldn't do it for him self. In the same way in which we were lucky to have him in our lives.

Siva mama,
Everybody will immensely miss you and although your body may not be with us today, peas of your delicate soul lives in every one of our hearts and you will be forever remembered.

From yours loving cousin,
Sri, Raji family
Niece & Nephew
Shamila, Shara, Sayan, Vithya Tharangan

**AUM NAMA SIVAYA! MAY YOUR ATHMA REST IN PEACE WITH GOD!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அ**ணிகலனின் அதிபதியாய்
எண்ண குமறலை எடுத்துரைக்கா சேவகனே!
உம் தாழ்....
எங்கள் மூத்த முதல் அத்தானே!
எங்கள் அம்மாவின் அமைதியை ஆற்றி
எமக்கு அதிகாலை ஆகாரம் ஆக்கி தந்ததையும்
எண்ண எம் மனம் குமுறுகின்றதே!
என்னையும் உங்கள் குடும்பத்தின் ஒருவனாக்க
உத்தரவு கொடுத்தது அன்று
உம் ஆசி என்றும் எம்மோடு இருக்கம்
உம் பெறாமக்கள் உம்மிடம் ஒன்றாய் கழித்த சில
நாட்களில் உங்களிடம் பெற்ற அன்பின் நினைவுகளுடன்
சொந்த ஊர் விட்டு
சொந்த நாடு விட்டு
சொந்த உறவுகளை விட்டு
சோகம் ஆற்ற....
தொலைபேசியில் போனதவே!
எல்லைகள் அற்ற எண்ணங்களுடன்

ஆத்மசாந்தி வேண்டி நிற்கின்றோம்...!

**அற்புதநாதன், பவி**
**நிவேதா, அருணேஸ்**
**(பிரான்ஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியப்பா சிவா....

அன்பின் அரவணைப்பாய்
எமக்கு ஆசைக்கோர் சிவாப் பெரியப்பா
மௌனியாக இருந்தாலும்
மழலைகள் எமக்கு மனதிலே
ஆசைப் பெரியப்பா நீங்கள்

என்றென்றும் நீங்கள் எம்முடன்
மீண்டும் உறவாட வேண்டும்
நீங்கள் எமக்கு அத்தான் எனும் ஸ்தானமல்ல
தந்தைக்கு தந்தையாய் வழிகாட்டிய
அத்தான் உங்கள் ஆத்மா சாந்தியடைய
கடவுள் துணை புரிவாராக....

**துரை, குஞ்சு,**
**பிள்ளைகள்**
**(ஓமான்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அ**த்தான் என்று சொல்வதற்கு எனக்கு வாய் இல்லை
அப்பா என்று உங்களை வாயார நான் அழைத்தேன்
என்னை உங்கள் மகன்போல் காத்திருந்தீர்கள்
நீங்கள் எனக்கு அப்பா மட்டுமில்லை
ஒரு தோழராகவும் இருந்தீர்கள்
நீங்கள் எனக்கு முதன் முதலில் நான் வாழவைப்பேன் என்ற
திரைப்படத்தை எனக்கு காட்டினீர்கள்
அதே போல எங்கள் குடும்பத்தையும்
வாழ வைத்தீர்கள்
தங்கள் எனக்கு எத்தனை புத்திமதிகள்
கூறி இருப்பீர்கள்
அத்தான் உங்கள் ஆத்மா சாந்தியடைய
கடவுள் துணை புரிவாராக

**ஆசை மச்சான்**
**குமரேந்திரன் (ராசன்)**
**ஜேர்மன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சிவா" எனும் சிவா மாமா...

அன்பு, இரக்கம், பணிவு, கொடை, கட்டுப்பாடு.......... எனும் குணங்கள் ஒருங்கப்பெற்றவர் தான் எங்கள் சிவா மாமா. உண்மையிலே இவர் ஓர் சிவப் பிறிவி என்றே கூறலாம். பிறருக்கு தீங்கு விளைவிக்க நினைக்காதவர். பதிலாக பிறர் நல்லாயிருக்க நினைப்பவர். மாமிசம் உண்ணாதவர். உயிர்க்கொலைக்கு அஞ்சுபவர். பிற உயிர்களிடத்தில் அன்புள்ளவர். ஏனெனில் தஞ்சம் தேடிவந்த புறாக்களுக்கெல்லாம் வீட்டிலே கூடு கட்டிக்கொடுத்தவர். பசுமாடு வளர்த்தவர்........... என அவரது நற்குணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இவர் ஓர் இசைப்பிரியர். நன்றாகப் பாடுவார். இயற்கை ரசிகர். வீட்டு முற்றம் என்றால் சொல்லத்தேவையில்லை. வித விதமான பூக்கண்றுகள் நாட்டி அழகுபடுத்தி இரசிப்பார். இவையெல்லாம் அனேகமாக அவருடன் பழகிய எல்லோருக்கும் தெரிந்தவையாக இருக்கலாம். ஆகவே எனது தனிப்பட்ட அனுபவங்கள் சிலவற்றையும் பகிரலாம் என நினைக்கிறேன்.

சிவா மாமாவை நினைத்தால் எனக்கு, அவரது செந்தழிப்பான முகம், நறுக்கென்ற மீசை, பளபளத்த கன்னங்கள், தாள்களுடன் பேனா அடங்கிய சேட் பொக்கட் (shirt pocket), வெண்ணிற வேட்டி தான் எனக்கு ஞாபகத்துக்கு வரும். நான் சிறுவனாக இருந்த போதே அவருடன் பழகிய காலங்கள் அதிகம் எனக் கூறலாம். எனக்கு அவரைக் கண்டால் ஓர் பயமும் , பணிவும் கலந்த அன்பு இருக்கும். சைவ விசேட நாட்களான தீபாவளி, வருடப் பிறப்பு என்றால் உடுப்பு வாங்கித் தார மறக்கமாட்டார். பள்ளிக்கூடம் போடுவதற்கு வாங்கித் தந்த நீலக் நிறக் காற்சட்டையும், வெள்ளை பெனியனும் இன்னமும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. நானும், மனோ அண்ணாவும் அவரது வீட்டுக்குச் சென்று விளையாடிவிட்டு, தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு தூங்கி விடுவோம். அவர் வேலையால் வந்து எங்களை எழுப்பி சைக்கிளில் ஒற்றைக் கையில் என்னை அணைத்துக்கொண்டு, மற்றைக் கையில் சைக்கிளைப் பிடித்துக்கொண்டு ஓடுவார். மனோ அண்ணா பின்னால் இருப்பார். நான் அவரது தோளில் சாய்ந்து மீண்டும் தூங்கிவிடுவேன். எனது வீட்டுக்குக் கொண்டுவந்து இறக்கிய பின்பே எனக்கு வீடு வந்தது தெரியும். அவ்வளவு பலசாலியாக இருந்தவர் எங்கள் சிவா மாமா. நான் அவரது வீட்டில் நிற்கும் போது அவர் சாப்பிட வந்தால், அங்கிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சியிடம் கேட்பார் "நிர்மலன் தம்பிக்கு சாப்பாடு குடுத்ததா?" எனக் கேட்பார். இல்லையெனில் கொடுக்கும்படி செல்லுவார். இவையெல்லாம் இவர் சிறுவர்களிடத்தில் கொண்ட அன்பையும் , இரக்கத்தையுமே காட்டுகின்றது. அது எனக்கு ஒரு பொற்காலமாகவே இருந்தது. இறுதியில் கனவில் கூட, அப்போது பார்த்த எங்கள் சிவா மாமாவையே அவரது உயிரான "ஜோதிப் பிடைவை" கடையில் நிற்கக் கண்டேன். அப்போது கூட நான் மனதுக்குள் சந்தோசப்பட்டேன் மாமாவுக்கு சுகம் வந்து முன்னர் மாதிரி கடை திறக்கப்போகிறார் என்று. ஆனால் என்னென்னவோ நடந்துவிட்டது.

இவ்வாறு சிறுவனாக இருந்த எனக்கே உயர்ந்த மனிதனாக, ஓர் அன்புள்ளம் கொண்டவராகத் தெரிகிறார் என்றால், பெரியவர்களிடத்தில் எப்படி இருந்திருப்பார் என நினைத்துப் பார்க்கிறேன். என் கருத்துப்படி சிவா மாமா ஓர் சிவ அவதாரம் எனக் கூறினால் அது மிகையாகாது. அவர் சிவனிடத்திலிருந்து வந்தவர் சிவனிடத்தே போய்ச் சேர்ந்திருப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

**உங்கள் பிரிவின் துயரில்**
**பங்குகொள்ளும்**
**நிர்மலன் – மருமகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்குச் சில...

✐ எதிர்காலத்தில் நம்பிக்கை இல்லாவிட்டால் வாழ்க்கை மடிந்து போகும். உயிர் வாழ்வதற்கு காற்றும், நீரும் சூரிய ஒளியும் தேவைப் படுவதுபோல ஒவ்வொருவருக்கும் நம்பிக்கை தேவை.

✐ நன்மையைச் செய்யுங்கள், யாருக்கென்று மட்டும் கேட்காதீர்கள்.

✐ சிந்திக்காதவன் முட்டாள்; சிந்திக்கத் துணியாதவன் கோழை, சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன்.

- டிரம்மண்ட்

✐ ஒரு தந்தை பத்து குழந்தைகளைக் காப்பாற்றுகிறார். ஆனால் பத்து குழந்தைகள் ஒரு தந்தையைக் காப்பாற்றும் என்று உறுதியாகக் கூற முடியாது.

- நீட்தே

✐ மௌனம் அறிவிற்கு அழகு; பொறுமை திறமைக்கு ஏற்றது.

- கவி காளிதாசர்

✐ வீணாய்ப் போன நாள் எது? நாம் ஒரு தடவைகூட சிரிக்காமல் கழித்துவிட்ட நாள்தான் அது.

- செபஸ்ரியான்

✐ உண்மையை நேசி; பிழையை மன்னித்துவிடு

✐ - வால்ட்டேர்

✐ அறிவற்ற சிநேகிதனிடம் சேர்வதைவிட புத்திசாலியான விரோதியை அடைவதே மேல்.

- ஷேக்ஸ்பியர்

✐ புரிந்துகொள்ளாத போதும் பொறாமைப்படும்போதும், மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதிவிடுகிறான்

- சாக்கிரட்டீஸ்

✐ கடந்த காலத்தை நாம் ஆராய்ச்சி செய்யலாம். அதில் போற்றுதற் குரிய அம்சங்களைப் போற்றலாம். ஆனால் நமது கண்கள் எப்போதும் முன்னோக்கிப் பாய வேண்டும். நமது கால்கள் எப்போதும் முன்னோக்கி நடக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✐ இளமையின் துடிப்பிலே தோல்வி என்ற சொல்லுக்கு இடமே யில்லை.

- ஃபல்வர் லைட்டன்

✐ கோழை பலமுறை செத்துப பிழைக்கிறான். ஆனால் வீரன் ஒருமுறைதான் சாகிறான்.

- ஷேக்ஸ்பியர்

✐ எதை இழந்தாலும் கௌரவத்தை இழக்க இடம் தரக்கூடாது.

✐ கணவனே மனைவியின் முதற்குழந்தை

- பாஸின்

✐ பிறருடைய துன்பங்களை நினைத்துப் பார்ப்பதால் நம்முடைய துன்பங்களைச் சகிக்க கற்றுக்கொள்கிறோம்.

- மார்க் ட்வைன்

✐ உலகமே என் தேசம்; நன்மை செய்வதே என் சமயம்

- தாமஸ் பெய்ன்

✐ பிறரைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். அது உங்கள் உள்ளத்தின் மதிப்பைக் குறைக்கும்.

- இங்கர்சால்

✐ ஒருவனின் தன்னம்பிக்கையும் சுய ஒழுக்கமும் அவனது அதிஷ்டத்தை தீர்மானிக்கும்.

- வைரஸ்

✐ முதலில் தூசியைக் கிளப்பிவிடுகிறோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகிறோம்.

- பிஷப் பார்க்லி

✐ சுவர்க்கத்தை நன்கு போற்ற வேண்டுமானால் பதினைந்து நிமிஷமாவது நரக அனுபவம் தேவை.

- கார்ல்டன்

✐ நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக்கொள்வதே நமக்கு ஏற்படக் கூடிய பெரிய அதிஷ்டமாகும்.

- கதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✏ நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள்.

- டால்ஸ்டாய்

✏ ரகசியப் பேச்சும் உரத்த குரலும் கேட்கத் தகுதியற்றவை.

- சிங்கவ்

✏ உணர்ச்சி வேகத்தில் அறிவாளியும் மடையன் ஆகிவிடுகிறான்.

- காரவான்

✏ நாட்டிலுள்ள அறிஞர்களின் உள்ளங்களை நமக்கு எடுத்துக் காட்டும் கண்ணாடிகளே புத்தகம்.

- டெவேர்கு கிப்ரான்

✏ சிந்திக்காதவன் முட்டாள்; சிந்திக்கத்துணியாதவன் கோழை; சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக்காரன்.

- டிரம்மண்ட்

✏ பணம் அழகான நாயை விலைக்கு வாங்கிவிடும். ஆனால் பணத்தால் அதன் வாலை ஆட்டுவிக்க முடியாது.

- தல்லிங்ஸ்

✏ பந்தயம் பேராசையின் குழந்தை, அவமானத்தின் நண்பன், தொல்லையின் தந்தை.

- வீனஸ்

✏ முட்டாள்களின் நடுவில் ஒரு புத்திசாலி இருப்பது மூடர்களின் மத்தியில் ஓர் அழகி இருப்பது போல்.

- லாயி

✏ செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான். செய்ய முடியாதவன் போதிக்கிறான்.

- கர்னல் கீல்

✏ உன் நோக்கத்தை வாளால் அறுத்துக் கொல்வதைவிட நகை முகத்தால் சாதித்துக்கொள்வதே சாலச்சிறந்தது ஆகும்.

- ஷேக்ஸ்பியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✐ சரித்திரத் தொடர்புகளே இலக்கியத்தின் எதிர்காலத்தையும் தீர்மானிக்க வல்லன.

- டி.எஸ். எலியட்

✐ வாய்ப்பு ஏற்படும்போது உடனடியாக நல்லது செய்துவிடுங்கள். இல்லையென்றால் நீங்கள் அதைச் செய்ய விரும்பும்போது வாய்ப்பே இல்லாமல் போய்விடலாம்.

✐ வளமான காலத்தில் நண்பர்கள் நம்மைத் தெரிந்துகொள்கிறார்கள். வறுமைக் காலத்தில் நாம் நண்பர்களைத் தெரிந்துகொள்கின்றோம்.

✐ காலம் அனைத்தையும் வென்றுவிடும். எனவே நேரத்துக்குப் பணிந்து கடமை புரியுங்கள்.

✐ நீங்கள் கற்றுக்கொடுக்கும் கல்வி ஒரு குழந்தையை மகாத்மாவாக்க வேண்டும் என்பதில்லை; மனிதனாக ஆக்கினால் போதும்.

✐ தன்னம்பிக்கை இருக்கும்வரை நம் இளமை குன்றாது. பயம் நம்மை "குடுகுடு" கிழவனாக்கிவிடும்.

✐ நம்பிக்கை எனும் கண்கொண்டு பார்க்கவேண்டுமானால் பகுத்தறிவுக் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும்.

✐ உறுதியான மனம் படைத்தவனே உன்னதமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அமைத்துக்கொள்கிறான்.

✐ வெற்றி என்பது என்ன? ஒரு சதவிகிதம் சிந்தனையும், தொண்ணூற்றொன்பது சதவிகிதம் உழைப்பும் சேர்ந்ததுதான்.

✐ தொழில் எத்தனை கீழ்த்தரமானாலும் அதைச் செய்வதில் அவமானம் ஒன்றும் இல்லை. சோம்பேறியாகத் திரிவதுதான் அவமானம்.

✐ இளமையின் துடிப்பிலே தோல்வி என்ற சொல்லுக்கு இடமேயில்லை.

✐ உலகில் எப்படி வாழ்வது என்பதையாவது தெரிந்துகொள்ளும் அளவுக்கு உன்னை நீயே அறிந்துகொள். அதுவே வாழ்க்கையில் நீ அடையத்தக்க பெறும்பேறு.

- சிமிலி பிலாண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த பேச்சு, குறைந்த கேள்வி, தனித்த சிந்தனை, தம் கருத்தில் ஐயுறவு, பிறர் கருத்தில் மதிப்ப இவை இளைஞர் பின்பற்றவேண்டிய சிறந்த விதிகள்.

- சர் வில்லியம்

நாம் விரும்பும் பொருள் நம்மிடம் இல்லாதபோது நம்மிடம் இருக்கும் பொருளை நாம் விரும்ப வேண்டும்.

- புஸ்ஸீரபுடின்

நெஞ்சிலே பாய வரும் ஆயிரம் ஈட்டிகளுக்கு நான் அஞ்சுவ தில்லை. ஆனால் ஓர் அறிஞரின் பேனா முனைக்கு பயப்படுகிறேன்.

- நெப்போலியன்

வெறுத்தவன் சொல்லாதது இல்லை. பசித்தவன் தின்னாததும் இல்லை.

- அ. இராமானுஜ ஆசார்யார்

சான்றோர் கெட்டாலும் அவர்தம் உயர்ந்த பண்புகள் அழியா

- லாங் ஃபெல்லோ

நாம் அறிவை விலை கொடுத்து வாங்கிவிடலாம். ஆனால் உணர்ச்சி அன்பு இல்லை என்றும் விற்பனைக்கு வருவதில்லை.

- லவல்

குழந்தையின் எதிர்காலம் எப்போதும் தாயின் செயலில் அடங்கி இருக்கிறது.

- நெப்போலியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்நெறி

## அன்பு

- அன்பு ஆண்டவன் அருளில் ஆரம்பமாகின்றது.
- அன்பு அழகிய வாழ்க்கையின் அடித்தளம்.
- அன்பு இணைத்துக்கொண்டு அணைத்துச் செல்லும்.
- அன்பு அதிகமாகும்போது மனிதனாகின்றோம்.
- அன்பு சகலதையும் தாங்கும் சகலதையும் சகிக்கும்.
- அன்பு இருக்குமிடத்தில் அமைதியைக் காணலாம்.
- அன்புள்ள இதயம் அனைத்தையும் அடையும்.
- அன்பு நீடிய சாந்தமும் சந்தோசமும் நிறைந்தது.
- அன்பான வார்த்தைகள் ஆத்திரத்தை அடக்கும்.
- அன்பு ஆணவம் அற்றது. அதிகாரம் செய்யாது.
- அன்புள்ள இடத்தில் இன்பம் சுற்றிச் சுற்றி நிற்கும்.
- அன்பிலே ஆனந்தமான வாழ்வு பிறக்கின்றது.
- அன்பு பழிவாங்காது. பாவம் செய்யாது. பண்புள்ளது.
- அன்பு ஒரு அர்த்முள்ள வாழ்க்கையை அமைக்கின்றது.
- அன்பு உதவி செய்யாது. உபத்திரவம் கொடுக்காது.
- அன்பு நீதியானது. நேர்மையானது, நம்பிக்கையுள்ளது.
- அன்பு கொடுப்பவரையும் வாங்குபவரையும் பிணைக்கின்றது.
- அன்பு பாசமுள்ளது, நேசமுள்ளது. மோசம் செய்யாது.
- அன்பு இழக்கப்படும்போது அத்தனையும் இழக்கப்படுகின்றது.
- அன்பு செழிப்பானது. சினம் கொள்ளாது, சந்தேகமற்றது.
- அன்பு நுழையும்போது இன்பம் இறுதிவரை இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அன்பு கலகம் செய்யாது, காலம் பூராவும் காப்பாற்றும்.
- அன்பு மூர்க்கம் கொள்ளாது. மென்மையானது, மேன்மையுள்ளது.
- அன்பு அன்னியோன்யமான குடும்ப வாழ்வு குதூகலம் பெறுகின்றது.
- அன்புள்ள இதயம் இளமை இழக்காது, இன்பம் பெருக்கும்.
- அன்பு தன்னைப் புகழாது தற்பெருமை கொள்ளாது. மென்மை யானது.
- அன்பினால் வரும் வார்த்தைகள் அளவற்ற ஆனந்தம் தரும்.
- அன்பு இரக்கமுள்ளது. இறுமாப்பாயிருப்பது. இனிது பேசும்.
- அன்பு ஆதாரமாகக் கொண்டு அழகிய வாழ்க்கை அமைகின்றது.
- அன்பிலே பிறந்தாய், வளர்ந்தாய், அதன் வழியே வாழ்ந்துகொள்.
- அன்பை அறிந்தவர்களுக்கு ஆண்டவன் ஆசீர்வாதம் அமையும்.

## தகவல் களஞ்சியம்.

- இராணுவத்தினர் சீருடை அணியும் முறையை முதன்முதலில் கொண்டுவந்தவர் மாவீரன் நெப்போலியன்.
- ரவீந்திரநாத் தாகூரின் பாடல் வரியிலிருந்துதான் இந்திய வானொலியின் "ஆகாஷவாணி" என்ற சொல் எடுக்கப்பட்டது.
- மனிதனைப் போல தரையில் நிமிர்ந்து நடக்கும் திறன் பெற்றது. "பென்குயின்" பறவை மட்டும்தான்.
- வியாழன் கோளை ரோமானியர்கள் தெய்வமாக வழிபட்டனர்.
- 100 அடி உயரத்திலிருந்து குதித்தாலும் காயமின்றி தப்பிக்க அணிலால் முடியும்.
- பூச்சி இனத்தில் ஒரே இடத்தில் நின்று பறக்கக்கூடியது "தட்டான் பூச்சி" மட்டுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு...

| | | |
|---|---|---|
| மிக மிக நல்ல நாள் | : | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | : | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | : | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | : | சமயோஜித புத்தி |
| மிகக் கொடிய நோய் | : | பேராசை |
| மிகவும் சுலபமானது | : | குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | : | பொறாமை |
| நம்பக் கூடாதது | : | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | : | அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | : | உபதேசம் |
| செய்ய வேண்டியது | : | உதவி |
| விலக்க வேண்டியது | : | விவாதம் |
| உயர்வுக்கு வழி | : | உழைப்பு |
| நழுவ விடக் கூடாதது | : | வாய்ப்பு |

## " வாழ்க வளமுடன் "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது!”

என்பது வல்லவன் வகுத்ததடா கர்ணா!

வருவதை எதிர்கொள்ளடா!

தாய்க்கு மகனாய் தம்பிக்கு அண்ணனாய்

சேய்க்கு நீரே! செல்வங்களின் தந்தை நீரே!

ஊருக்கு நண்பன் நீரே!

உன் அன்பை இழந்தோமடா!

உன் அகம் அடங்கிக்கொண்டதாடா!

கர்ணா ! கர்ணா !

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த நன்றிகள்...

எங்கள் குலவிளக்காய் மிளிர்ந்த

இளைய திலகர்

பொங்கும் துயரை எமக்கீந்து பேறடைந்த

அந்நேரம்...

ஓடோடி வந்து உதவி செய்தோர்

உருக்கமோடு வந்து அஞ்சலித்தோர்

ஆறுதல் கூறி அரவணைத்து நின்ற உள்ளங்கள்

அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர்

ஆன பல செய்த அன்பினர்கள்

தொலைபேசி தந்திகள் இணையம்

மூலம் துயரம் தெரிவித்த உயர்வோர்கள்

மாத நிறைவுக் கிரியைகள் நடத்தி

வைக்கும் அந்தணர்களுக்கும்

கலந்து அஞ்சலிக்கும் அன்பர்கள்

அனைவருக்கும் இம்மலரை அச்சிட்ட



ஆரணி பதிப்பகத்தினர்க்கும் எம் இதயம் நெகிழ்ந்த


இனிய நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றோம்

கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

இங்ஙனம்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–





Arani Printers
234, Chemmani Road,
Nayanmarkaddu - 0779235807

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org